# நபிமார்களின் வாரிசுகள் என்போர்
# பிறை விஷயத்தில் கவனம் செலுத்துவார்களா?

**ஜாஃபர் சித்தீக்,** கம்பம்.

**சொல்வதற்கும், செயல்படுவதற்கும் முன்பு அறிந்து கொள்ளல்:**

*உயர்ந்தோனாகிய அல்லாஹ் கூறுகிறான்.*

*"(நபியே!) நீர் அறிந்து கொள்வீராக அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை" (அல்குர்ஆன் : 47:19)*

*இந்த வசனத்தில் அறிதலை இறைவன் முதலில் குறிப்பிட்டுள்ளான். அல்லாஹ்வைப் பற்றியும் அவன் அருளிய மார்க்கத்தைப் பற்றியும் விளங்கிச் செயல்படாத காரணத்தினாலேயே மாபெரும் வழிகேடுகள் சமுதாயத்தில் நிரம்பிக் கிடக்கின்றன.*

*படித்த கல்விமான்கள் முதல் பாமரர்கள் வரை ஏதாவது உந்துதலினால் வழிகேட்டில் செல்லக்கூடிய சூழ்நிலையைக் காண முடிகிறது. இந்து மதகுருமார்கள், கிறிஸ்தவ பாதிரிகள் மற்றும் பல்வேறு மதங்களிலுள்ள துறவிகள், எப்படி வழிகெடுத்துக் கொண்டிருக்கிறார்களோ அதேபோல் ஏக இறைவனால் அருளப்பட்ட மார்க்கத்தைப் போதிக்காமல் ஆலிம்கள் போர்வையில் அல்லாஹ்வுடைய இறைவழிகாட்டல் நூல் குர்ஆனை மக்கள் நெருங்கவிடாமல் தடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இதை பெரும்பாலான மக்களும் உணர்ந்து கொள்வதில்லை. 98% முஸ்லிம்களின் நிலைமை இப்படித்தான் உள்ளது. தங்களுடைய ஆலிம்களை, இயக்கத் தலைவர்களை ரப்பாக ஆக்கியுள்ளார்கள். இவர்களுடைய நிலையை அல்குர்ஆன் தெளிவாகப் பிரகடனம் செய்கிறது.*

*"அவர்கள் (குர்ஆனாகிய) அதனை விட்டும் தடுக்கிறார்கள். அவர்களும் அதைப் புறக்கணிக்கிறார்கள். அவர்கள் தங்களைத் தாங்களே நாசமாக்கிக் கொள்கிறார்கள். ஆனால் அவர்கள் உணர்ந்து கொள்வதில்லை." (6:26)*

*இந்த நிலைமைதான் முஸ்லிம்களிடையேயும் காணப்படுகிறது. மேலும் நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.*

*"வழிகெடுக்கும் தலைவர்களைப் பற்றியே என் சமுதாயத்தார் விஷயத்தில் அஞ்சுகிறேன். என் சமுதாயத்தாரிடையே உயர்த்தப்படும் வாள் மறுமை நாள் வரை கீழே வைக்கப்படாது" நூல்: முஸ்னத் அஹ்மத்*

*(பார்க்க: தஃப்சீர் இப்னுகஸீர் Vol. 3 பக்.379)*

**அறிஞர்கள் யார்?**

*அல்குர்ஆன் வசனம் 47:19ன்படி, எந்தவொரு மார்க்கம் சம்பந்தப்பட்ட செயல்களையும் சொல்லுவதற்கும், செயல்படுத்துவதற்கும் முன் அறிந்து கொள்வது அவசியமாகிறது.*

*உலகியல் துறையில் எப்படிப்பட்ட உயர் கல்வி கற்று இருந்தாலும் அல்லது மதகுருமார்கள் தங்களுடைய வேதங்களை கரைத்துக் குடித்திருந்தாலும் அல்லது தத்துவஞானிகள் கோடிக்கணக்கானத் தத்துவங்களைச் சொல்லியிருந்தாலும் இவர்கள் ஒருபோதும் அறிஞர்கள் என்ற வட்டவரைக்குள் வரமுடியாது. இந்த உலகில் வேண்டுமானால் மக்களின் பார்வையில் அறிஞராக இருக்கலாம். ஆனால் மறுமையில்?*

*"ஆது, ஃதமூது கூட்டத்தார் நல்லறிவுடையவர்களாக இருந்தும் ஷைத்தானைப் பின்பற்றியதால் அழிந்து போயினர்" (29:38)*

*குர்ஆனை அதிகமாக மனனமிட்டவர் சிறப்புக்குரியவராக இருந்தாலும், மார்க்கத்தை மறைத்தால் அல்லாஹ்வுடைய சாபம்தான் உண்டாகும். (பார்க்க அல்குர்ஆன்: 2:159,162)*

*பிஹறப்லில்லாஹி ஜமீஆ என்று அல்லாஹ் கட்டளையிட்டு இருக்க ஆலிம்களுக்கு மட்டும் புரியும், மற்ற மனிதர்களுக்குப் புரியாது*

என்று சரடுவிடும் அரபி விற்பன்னர்களையும் காணத்தான் செய்கிறோம். இதற்கு எந்தவொரு ஆதாரத்தையும் அல்குர்ஆனில் காண முடிய வில்லை.

உண்மையில் உலமாக்கள்(அறிஞர்கள்) என்ற பதம் அல்லாஹ்வைப் பற்றிய அறிவும், அச்சமும் உள்ளோருக்கே பயன்படுத்தப்படும்.

"நிச்சயமாக அல்லாஹ்வின் அடியார்களுள் அவனைப் பயப்படுபவர்களே (அவனைப் பற்றி அறிந்த) கல்விமான்கள் ஆகும்" (35:28)

மார்க்க விஷயத்தில் கருத்து வேறுபாடுகள் உண்டாகும்போது அல்லாஹ்வின் பக்கமும், அவனது தூதரின் பக்கமும் செல்லுங்கள் என்று அல்லாஹ் கூறியிருக்க, மார்க்க அறிஞர்கள் என்று கூறிக் கொள்வோர் மன இச்சையையும், சுயவிளக்கங்களையும் மக்களுக்குப் போதிக்கும் சூழ்நிலை உருவாகியுள்ளது. எந்தவொரு மார்க்கத்தின் காரியங்களிலும் அல்குர்ஆனையும், நபி (ஸல்) அவர்களின் சொல், செயல், அங்கீகாரம் ஆகியவற்றைப் பின்பற்ற மட்டுமே அல்லாஹ் கட்டளையிட்டு இருக்கிறான்.

### பிறை விஷயத்தில் அல்குர்ஆனின் கட்டளையை நிராகரிப்பது ஏன்?

"நிச்சயமாக (மார்க்கமறிந்த) அறிஞர்கள் நபிமார்களின் வாரிசுகள். அவர்கள் திர்ஹத்திற்கோ, தீனாருக்கோ வாரிசுகள் கிடையாது. அவர்கள் அறிவைத்தான் விட்டுச் சென்றுள்ளனர். இந்த அறிவைப் பெற்றவரே பெரும் பாக்கியம் பெற்றவர் ஆவார்." (அபூதர்தா(ரழி) திர்மிதி 2606, அபூதாவூத்: 3157, அஹ்மது : 20723)

இந்தச் செய்தி பலவீனமான செய்தியாகும். பலவீனமான ஹதீஃதுகளைப் பின்பற்றி அமல் செய்யலாம் என்று கூறும் சுன்னத் வல் ஜமாஅத்தினர் மேற்கண்ட பலவீனமான நபிவழியின் அடிப்படையில் செயல்படுகிறீர்களா? இல்லையே!

அல்குர்ஆனில் சொல்லப்பட்டுள்ள பல அறிவியல் சார்ந்த விஷயங்களை ஏற்றுக் கொள்ளும் உலமாக்கள், இயக்கமாயை உலமாக்கள் பிறை பற்றிய தெளிவான ஆயத்துகளை மறுப்பது ஏனோ? அல்லாஹ் 29:69ல் கூறியிருப்பது போல் முயற்சி செய்திருந்தால் அரபி, அறிவியல் அறிஞர்கள் இணைந்து பிறை பற்றிய சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி வைத்திருக்கலாமே?

அல்லாஹ் உம்மத்தன் வாஹிதா என்று சொல்லியிருக்க இந்த ஃபிர்கா(பிரிவினை) வாதிகள் தங்களுடைய செயலைச் சரிகண்டே, நபி(ஸல்) அவர்கள் சொன்ன ருஃயத் வார்த்தையை சரிவர ஆராயாமல், அறிந்து கொள்ள ஆசைப்படாமல் அல்லாஹ்வுடைய வார்த்தையை துச்சமாக நினைக்கின்றனர். இதற்கு சுன்னத் வல்ஜமாஅத், தவ்ஹீது ஜமாஅத், JAQH ஆகியோர் கொடுத்த ஆதாரத்தையே தருகிறோம்.

### அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்:

"நான் ஒருங்கிணைந்த பொருள்கள் கொண்ட வார்த்தைகள் வழங்கப்பட்டு அனுப்பப் பெற்றுள்ளேன்".

விரிவான பொருள்களை உள்ளடக்கிய சுருக்கமான சொற்களுக்கே 'ஜவாமிஉல்கலிம்' என்பர்.

பிறை சம்பந்தப்பட்ட ஹதீஃத்களில்,

''ஸூமூ லிருஃயதிஹி வ அஃப்திரூ லிருஃயதிஹி ஃபஇன் கும்ம அலைகும் ஃபக்மிலு அதத''

''ஸூமூ லிருஃயதிஹி வஅஃப்திரு லிருஃயதிஹி ஃப இன் கும்ம அலைகும் அஸ்ஸஹ்கு ஃஉத்து ஃதலாஃதீன்

போன்ற வாசகங்கள்தாம் அதிகமாக வருகின்றன.

(சந்திர) மாதம் என்பது 29 அல்லது 30 நாட்களைக் கொண்டதாக இருக்கிறது என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். ருஃயத் என்ற வார்த்தைக்குக் கண்ணால் பார்த்து என்று மட்டும் பொருள் கொண்டால் பிறையின் ஒருசில படித்தரத்தைக் காண முடியாத சூழ்நிலை ஏற்படுகிறது.

பூமியில் உள்ள எல்லா நாடுகளையும் சந்திரன் சுற்றி வரத்தான் 29 நாட்கள் 12 மணி 44 நிமிடங்கள் 2.9 விநாடிகள் ஆகின்றது. ''கத்தரஹூமனாஸில'' என்று அல்லாஹ்

தன்னம்பிக்கையுடன், சுய சிந்தனையுடன் படியுங்கள், பரப்புங்கள் அல்குர்ஆன், அல்ஹதீஸ்!

அல்குர்ஆனில் கூறியுள்ளான். ஏற்கனவே நிலவின் படித்தரங்கள் நிர்ணயம் செய்யப் பட்டுவிட்டதால் படித்தரங்களில் எந்தவொரு மாற்றமும் ஏற்படாது.

பிறை பார்ப்பது இபாதத் என்று இவர்க ளாகச் சட்டம் இயற்றிக் கொண்டதால் மேற் கில் மறை யும் பிறையைப் பார்த்து மாதம் ஆரம் பித்து விட்டதாக சொல்கிறார்கள்; இது தெளி வான பித்அத்ஆகும்.

பார்ப்பதுதான் நபிவழி என்று சொல்கிறவர் கள் 12 இஸ்லாமிய மாதங்களில் பெரும் பாலான மாதங்களை 30 ஆகவே பூர்த்தி செய் கிறார்கள். இது நபிவழிக்கு முரண் அல்லவா?

அப்படியெனில் 29 நாட்கள் கொண்ட மாதம் எப்போது வரும்?

உதாரணமாக ஒருமாதம் 29 நாட்கள் கொண்டதாக இருந்தால் 28 படித்தரங்களைப் பார்க்கலாம். ஆனால் இவர்கள் செய்யக்கூடிய ஹிமாலயத் தவறு 29ம் நாள் மஃரிபில் பிறை பார்க்கப் போகிறோம் என்று உளறுகிறார்கள். 29 நாட்கள் இருந்தால் 28வது படித்தரம் ஃபஜ்ரில்தான் தெரியும். மஃரிபில் தெரியாது. ஆகையால் மாலையில் பிறை தெரியவில்லை என்று 30ஆக ஆக்குகிறார்கள். (அந்நஸீஹ)

பிறையைக் கண்ணால் பார்த்துதான் மாதம் ஆரம்பிக்க வேண்டும் என்று சொல்பவர்கள் நிச்சயமாகப் பொய் சொல்பவர்களே! அப்படி கண்களால் பார்த்திருந்தால் நபி(ஸல்) அவர்கள் கூறியது போல் 29 அல்லது 30 நாட்கள்தானே வரவேண்டும்.

## தமிழ்நாட்டில் மூன்றுநாட்கள் துல்ஹஜ் பெருநாள் தொழுகை நடைபெற்றது

| | கணக்கீட்டு அடிப்படையில் | JAQH | TNTJ, SJ |
|---|---|---|---|
| 25.10.12(வி) | துல்ஹஜ் 10 | | |
| 26.10.12 (வெ) | துல்ஹஜ் 11 | துல்ஹஜ் 10 | |
| 27.10.12 (ச) | துல்ஹஜ் 12 | துல்ஹஜ் 11 | துல்ஹஜ் 10 |
| 28.10.12 | துல்ஹஜ் 13 | துல்ஹஜ் 12 | துல்ஹஜ் 11 |
| 29.10.12 | துல்ஹஜ் 14 | துல்ஹஜ் 13 | துல்ஹஜ் 12 |
| 30.10.12 | துல்ஹஜ் 15 | துல்ஹஜ் 14 | துல்ஹஜ் 13 |
| 31.10.12 | துல்ஹஜ் 16 | துல்ஹஜ் 15 | துல்ஹஜ் 14 |
| 01.11.12 | துல்ஹஜ் 17 | துல்ஹஜ் 16 | துல்ஹஜ் 15 |
| 02.11.12 | துல்ஹஜ் 18 | துல்ஹஜ் 17 | துல்ஹஜ் 16 |
| 03.11.12 | துல்ஹஜ் 19 | துல்ஹஜ் 18 | துல்ஹஜ் 17 |
| 04.11.12 | துல்ஹஜ் 20 | துல்ஹஜ் 19 | துல்ஹஜ் 18 |
| 05.11.12 | துல்ஹஜ் 21 | துல்ஹஜ் 20 | துல்ஹஜ் 19 |
| 06.11.12 | துல்ஹஜ் 22 | துல்ஹஜ் 21 | துல்ஹஜ் 20 |
| 07.11.12 | துல்ஹஜ் 23 | துல்ஹஜ் 22 | துல்ஹஜ் 21 |
| 08.11.12 | துல்ஹஜ் 24 | துல்ஹஜ் 23 | துல்ஹஜ் 22 |
| 09.11.12 | துல்ஹஜ் 25 | துல்ஹஜ் 24 | துல்ஹஜ் 23 |
| 10.11.12 | துல்ஹஜ் 26 | துல்ஹஜ் 25 | துல்ஹஜ் 24 |
| 11.11.12 | துல்ஹஜ் 27 | துல்ஹஜ் 26 | துல்ஹஜ் 25 |
| 12.11.12 | துல்ஹஜ் 28 | துல்ஹஜ் 27 | துல்ஹஜ் 26 |
| 13.11.12 | துல்ஹஜ் 29 (NM) | துல்ஹஜ் 28 | துல்ஹஜ் 27 |
| 14.11.12 | முஹர்ரம் 1 | துல்ஹஜ் 29 | துல்ஹஜ் 28 |
| 15.11.12 | முஹர்ரம் 2 | முஹர்ரம் ? | துல்ஹஜ் 29 |

அல்குர்ஆன் உங்களுக்கு விளங்காது; நாங்களே விளக்குகிறோம் என்று கூறும் மவ்லவிகள்!

கணக்கீட்டு அடிப்படையில் (அல்குர்ஆன் 2:189, 6:96, 17:12, 36:39, 55:5, 10:5, 14:33) மாதத்தை ஆரம்பித்தவர்கள் சரியான நாளில் பெருநாள் கொண்டாடினர். அதேபோல் 12.11.12(திங்கள்கிழமை) அம்மாதத்தின் உர்ஜூனுல் கதீமை ஃபஜ்ர் நேரத்தில் 05.10 A.M. மணியளவில் கிழக்கில் காண முடிந்தது. மறு நாள் 13.11.12 (செவ்வாய்) அல்லாஹ்வின் அத்தாட்சியாகச் சூரிய கிரகணமும் நடைபெற்றது. உலகில் எங்கும் பிறை தென்படவில்லை, தெரியவும் வாய்ப்பு அறவே கிடையாது.

ஆனால் கண்ணால் பார்த்து ஆரம்பித்தவர்களுக்கு அன்றைய தினம் ஒரு சாராருக்கு 28வது பிறைக்குரிய நாளும், மற்றொரு சாராருக்கு 27வது பிறைக்குரிய நாளும் ஆகும். இவர்களின் வாதப்படி அன்று பிறையின் படித்தரம் இருந்திருக்க வேண்டும். ஆனால் அன்று சூரியகிரகணமாக இருந்ததால் பிறை தென்படவில்லையே?

எந்த அளவுக்கு மக்களை முழு மூடர்களாக தனி நபர் வழிபாட்டிற்குப் பாலம் அமைத்துக் கொடுத்திருக்கிறார்கள் என்று தயவு செய்து சிந்தியுங்கள்.

### பிறை விஷயத்தில் பிரிவினைவாதிகளின் கூற்றைப் பாரீர்:

ஏகத்துவ ஆசிரியரின் நையாண்டி வாதம்:

(செப். 2012 ஏகத்துவம் இதழ் பக்கம்:26)

பிறை விஷயத்தில் மதம் பிடித்து, பிறை மாதம் கண்ட இவர்களுக்கு ஜாக்கில் பட்டுக் கம்பளம் விரிக்கப்பட்டது. இந்த மவ்டீகப் பேர்வழிகள் ஜாக்கில் மகுடம் சூட்டப்பட்டனர். ஏதோ அமெரிக்காவின் நாஸா ஆய்வுக் கூடத்தில் பணிபுரியும் விஞ்ஞானிகள் போல் தங்களை நினைத்துக் கொண்டு செயல்பட்ட இவர்களின் அரைவேக்காட்டு வாதங்கள் மக்களிடம் எந்த வரவேற்பையும் பெறவில்லை. மக்களின் வெறுப்பையும், வேதனையையும் தான் பெற்றது....

பிறை சம்பந்தமாக நடைபெற்ற கருத்தரங்குகளில் TNTJ வினர் யாராவது இதுவரை கலந்து உள்ளனரா? மற்றவர்கள் நடத்தும் மார்க்கம் சம்பந்தப்பட்ட நிகழ்வுகளில் கலந்து கொண்டாலே தவறு; அடிப்படை உறுப்பினர் பதவியில் இருந்து நீக்கிவிடுவோம் என்று சொல்லி மிரட்டி வைத்தால் சத்தியத்தை எப்படி அறிவது? தக்லீதுவாதிகளுக்கும், தவ்ஹீதுவாதிகளுக்கும் வேறுபாடே இல்லையே!

அல்லாஹ், அல்குர்ஆனில் 47:19ல் குறிப்பிட்டது போல் முதலில் அறிந்து கொண்டுதான் இவ்வாறெல்லாம் பேசுகிறார்களோ? பிறை சம்பந்தமாகக் கூறப்பட்ட ஆயத்துகள் 2:189, 6:96, 17:12, 36:39, 55:5, 10:5, 14:33 ஆகியவற்றைப் புறக்கணிக்கக் காரணம் என்ன?

.....அவர்கள் தங்களிடமிருந்த கல்வியின் காரணமாக பெருமகிழ்ச்சி அடைந்திருந்தார்கள்.... (40:83)

ஷைத்தானிய சிந்தனை உள்ளவர்களுக்கு மேற்கண்ட ஆயத்துகள் விளங்குமா? எங்கே பெருநாள் தினத்தில் மக்கள் ஒன்றாகி விட்டால் வசூல் வராதோ என்ற பயமா? ஒன்றுபடுவதை விட வசூல்தான் குறிக்கோள்.

.... குறிப்பாக சுன்னத் ஜமாஅத்தினர் அதிக அளவில் கலந்து கொண்டனர். வழக்கத்தை விடப் பெருநாள் திடல் வசூலும் அதிகரித்தது...

(ஏகத்துவம் செப். 2012 பக்.29)

### 15.9.12 அன்று நடைபெற்ற JAQH அமைப்பின் செயற்குழு கூட்டத் தீர்மானத்தின் 11வது தீர்மானம்:

(பார்க்க அல்ஜன்னத் பக்.27 அக்டோபர் 2012)

"பிறை சம்பந்தமாக நமது ஜமாஅத் எடுத்திருக்கும் நிலைபாட்டிற்கு மாற்றமாக ஜமாஅத்தினர் ஒற்றுமைக்குக் குந்தகம் ஏற்படுத்தும் விதமாக நமது உறுப்பினர்கள் யாரேனும் 'உள்ளூர் பிறையை ஏற்று தகவலை நிராகரிப்போம் என்றோ அல்லது ஹிஜ்ரா கமிட்டி ஆஃப் இந்தியாவின் கொள்கையான கணக்கு கணிப்பு என்பதை ஏற்று தகவலை நிராகரிப்போம் என்றோ இந்த இரு முடிவுகளையும் எடுத்துக் கொண்டு யாரேனும் ஜமாஅத்திற்கு எதிராகச் செயல்பட்டால் அவர்கள் அடிப்படை உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கப்படுவார்கள் என தீர்மானிக்கப்பட்டது".

ஆக இரு பிரிவினை கூட்டத்தாரின் இலட்சியம் கூடாரம் காலியாகி விடாமல் தங்கள் ஆதரவாளர்களைத் தக்க வைப்பதிலேயே குறியாக இருக்கின்றனர்.

### அல்(டா) தாபியின் உண்மை வாக்குமூலம்:

சந்திரனின் 14,15 அல்லது 16வது படித்தரத்தில் பௌர்ணமி வருமே தவிர 12ல் வர

அல்லாஹ்வை விட நாங்களே விளக்கும் ஆற்றல் மிக்கவர்கள் என ஆணவம் பேசுகிறவர்களே!!

வாய்ப்பே கிடையாது. அதேபோல் மாதத்தின் கடைசி நாளில் 29 அல்லது 30ல் சூரிய கிரகணம் நடைபெறும். இயக்கவாதிகளின் பார்வையின் படி 12ம் நாள் அன்றே பௌர்ணமி இருக்கும்.

ஆனால் அல்(டா)தாபி முஸ்லிமில் வரும் 5678வது ஹதீஸை மேற்கோள்காட்டி பதினான் காம் நாள் நிலவை பௌர்ணமி தினத்தில் எந்தவிதமான இடையூறுகளும் இன்றி நாம் பார்க்கின்றோமோ அவ்வாறே படைத்த இறைவனாகிய அல்லாஹ்வை மறுமையில் பார்க்க முடியும் என்று அவராகவே உண் மையை ஒத்துக் கொண்டுள்ளார்.

(பார்க்க: தீன்குலப் பெண்மணி நவம்பர் 2012 பக்.12)

அதாவது பிறையின் 14வது படித்தரத்தில் தான் பௌர்ணமி வரும் என்று கூறியுள்ளார்.

**அஹ்லே ஹதீஸ் உலமாவின் கூற்று:**

1. நபி(ஸல்) அவர்கள் இபாதத்தை தீர்மானிப் பதற்கு முன்கூட்டியே நாட்களை கணக்கிட்டு கொள்ள அனுமதிக்கவில்லை. இது பித்அத் ஆகும் என்கிறார் காரணம்.

i. நேரடியான ஆதாரம் இல்லை

ii. லாநக்துபு, வலாநக்ஸுபு என்ற ஹதீஸை ஆதாரம் காட்டுகிறார்.

2. ஆய்வு செய்வதற்கு தகுதி வேண்டும் என்கிறார்.

3. நீங்கள் குர்ஆனை முற்படுத்துகிறீர்கள், ஹதீஃதை 2வது வைக்கிறீர்கள் என்றும் குற்றம் சாட்டுகிறார்.

4. ஆய்வு செய்ய தகுதியற்றவர்கள் மூலம் பரப்பப்படும் அகீதா அவாம்களை கவரத்தான் செய்யும் என்கிறார்.

**நமது விளக்கம்:**

“அவன்தான் எழுத்தறிவில்லா மக்களிடம் அவனுடைய வசனங்களை படித்துக்கட்டி அவர்களைப் பரிசுத்தமாக்கி அவர்களுக்கு இறைவழி காட்டல் நூலையும், ஞானத்தையும் கற்பிக்கும் படியான தூதரை அவர்களிலிருந்தே அனுப்பி வைத்தான். அவர்களோ அதற்கு முன்னர் பகிரங்கமான வழிகேட்டிலேயே இருந்தனர். (அல்குர்ஆன் : 62:2)

**அல்லாஹ் இந்த ஆயத்தில் யாரைச் சுட்டிக் காட்டுகிறான்?**

குர்ஆனை படிப்பதற்கு, ஆய்வு செய்வதற்கு முனைவர் பட்டம் வேண்டும் என்கிறாரோ? இப்போது உள்ள அரபி ஆலிம்கள் Ph.D., பட்டம் பெற்றா குர்ஆனை ஆய்வு செய்கிறார் கள்? பகிரங்கமான வழிகேட்டிலே இருந்தவர் களை பரிசுத்தமாக்கி வைத்தானே அந்த மாபெரும் கிருபையாளன், அவன்மீது தவக்குல் வைப்பதா? உங்களை போன்றவர்கள் மீது தவக்குல் வைப்பதா?

கணக்கிட்டு நாட்களை முன்கூட்டியே தீர் மானிப்பது பித்அத் கிடையாது. கணக்கிடு வதின் மூலம் மார்க்கச் சட்டத்தின் அடிப் படையை மாற்றவில்லை. 12 மாதங்கள் தான். மாதத்தின் நாட்களோ 29 அல்லது 30 தான். யாரும் 28ஆகவோ, 31 ஆகவோ ஆக்கவில்லை.

பிறை சர்ச்சைக்குத் தீர்வு கிடைக்க வேண்டு மென்றால்

1. அல்குர்ஆனின் ஆயத்துகள் பிறை சம்பந்த மாக என்ன சொல்கின்றன என்று ஆராய வேண்டும்.
2. ஹதீஃத்களை ஒன்று திரட்டி ருஃயத் என்ப தற்கு எந்த அர்த்தத்தை கொடுக்கலாம் என்று ஆராய வேண்டும்.
3. நாளின் ஆரம்பம் ஃபஜ்ரிலா, மஃரிபிலா என்று தீர்க்கமான முடிவைப் பெற வேண்டும்.
4. அரபி கற்ற மவ்லவிகள், அறிஞர்கள், விண் ணியல் ஆய்வாளர்கள் ஒன்றுகூடி ஒரு தீர்க்கமான முடிவைத் தரலாம்.
5. அல்குர்ஆனின் கட்டளைப்படி அவர்களின் செயல்கள் கலந்து ஆலோசித்தலாக இருக் கும் என்ற அடிப்படையில் ஆலோசனை செய்ய முன்வரவேண்டும்.

இல்லாவிட்டால்,

மத்ஹபு மவ்லவிகளும், தவ்ஹீது மவ்லவி களும், தரீக்கா மவ்லவிகளும்,இயக்கத் தலைவர் களும் ஆளுக்கொரு காரணத்தைக் கற்பித்துக் கொண்டு உம்மத்தன் வாஹிதாவை நிலை நாட்ட முன்வரமாட்டார்கள். இல்லா விட் டால் மாதாமாதம் தினம்தோறும் பிறை பார்க்க வேண்டும். இதில் ஏதாவது ஒன்றைச் செய்ய முன்வருவார்களா? நபிமார்களின் வாரிசுகளா? அல்லது அபூஜஹ்லின் வாரிசுகளா? பொறுத் திருப்போம்!

**குறிப்பு:** 12.11.12 அன்று ஃபஜ்ர் நேரத்தில் தெரிந்த பிறை மீண்டும் 16.11.12 வெள்ளி மாலை தான் தெரிந்தது. இஷா நேரத்திற்கும் பிறகும் பிறை தென்பட்டது. இதை முதல் பிறை முஹர்ரம் 1 என அறிவித்துள்ளார்கள். 3 நாட்கள் பிறை எங்கே போனது? முதல் பிறை 2 மணி நேரத்திற்கு மேல் தெரியுமா? சிந்தியுங்கள்!

அல்ஹதீஸ் உங்களுக்கு விளங்காது; நாங்களே விளக்குகிறோம் என்று கூறும் மவ்லவிகள்!